**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006**

**செப்டம்பர் / அக்டோபர் 2020**

**மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

செப்டம்பர் / அக்டோபர் 2020, மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாட்களின் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **18.11.2020 (புதன்கிழமை) முற்பகல் காலை 11.00 மணி** முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று Notification பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் – II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால், இதே இணையதள முகவரியில் Notification பக்கத்தில் "Application for Retotaling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தினை, பூர்த்தி செய்து இரு நகல்கள் எடுத்து **19.11.2020 (வியாழக்கிழமை) காலை 10.00 மணி முதல் 20.11.2020 (வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணிக்குள்** உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**மறுமதிப்பீடு**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ. 505/– |

**மறுகூட்டல்–II**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

**ஒம்/–**
**இயக்குநர்**

நாள் : 16.11.2020.
இடம் : சென்னை – 600 006.